**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 210/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா. 8 |
| Name | : | திரு. பார்த்திபன், காவல் உதவி ஆய்வாளர் |
| Father's/Husband Name: | | திரு. குணசேகரன் |
| Village | : | பெரம்பலூர் நகர காவல் நிலையம் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 34/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.08.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(1ம் எதிரி ஆஜர். எதிரிகள் 2 மற்றும் 3 ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

i) நான் தற்போது பெரம்பலூர் நகர காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.03.2021ம் தேதி மங்களமேடு காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பிலிருந்த போது ராஜகுமாரி க.பெ கண்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப மங்களமேடு காவல் நிலைய குற்ற எண் 171/2021 இதச சட்டப்பிரிவுகள் 294(b), 342, 323, 506(2) & 4 of TNPHW Actன்படி வழக்கு பதிவு செய்துள்ளேன். நான் **பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 23.03.2021ம் தேதி பகல் 11 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் தினேஷ், ஆகாஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ5 மற்றும் அ.சா.ஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சாட்சிகள் ராஜகுமாரி, ஜெகதீசன், ஜெயப்ரியா, அமுதா, செல்வம் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் மூவரும் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளதால் எதிரிகளை கைது செய்யவில்லை.

பின்னர் ஜெயப்பிரியாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தணிகாசலம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் என்னுடைய விசாரணையை முடித்து எதிரிகளின் மீது இதச சட்டப்பிரிவுகள் 294(b), 342, 323, 506(2) & 4 of TNPHW Actன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் நிலைய பொறுப்பில் எத்தனை மணிக்கு இருந்தேன் என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 22.03.2021ம் தேதி நடந்த சம்பவத்திற்கு 23.03.2021ம் தேதி காலதாமதமாக புகார் கொடுத்ததற்கான காரணத்தை புகாரில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார், அவர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று வந்ததால் காலதாமதமாகிவிட்டது என்று சொல்லியுள்ளார். புகார்தாரர் அரசு மருத்துவமனைக்கு சென்று வந்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

அ.சா.ஆ6 பார்வை மகஜரில் எதிரியின் இடம் எங்கு உள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இதர வழக்கு ஆவணங்களில் சம்பவயிடத்திற்கு அருகில் எதிரியின் இடம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பார்வை மகஜரில் இரண்டாவது பத்தில் நான்காவது வரிசையில் சம்பவயிடம் என்று மேலே எழுதி உள்ளதற்கு நான் Initial செய்தேனா என்றால் இல்லை. எதிரிகள் புகார்தாரரின் இடத்தில் அத்துமீறி நுழைந்து இடத்தை அளந்து குச்சியை நட்டுவைத்தார்கள் என்பது தான் வழக்கு என்றால் சரிதான். அ.சா.ஆ6 வரைபடத்தில் எந்த இடத்தில் எதிரிகள் குச்சியை நட்டு வைத்தார்கள் என்பதை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ5 பார்வை மகஜரிலும், குச்சி நட்டு வைத்ததற்கான தடயம் மற்றும் குச்சிகள் இருந்ததை பற்றி விசாரணை செய்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான், சம்பவத்தில் பிரச்சனை நடந்த இடத்தை மட்டும் பார்வையிட்டு மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன்.

நான் சம்பவயிடத்தை பார்வையிட்டிருந்தால் பிரச்சனை நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்த தடயங்களை குறித்து நான் சொல்லியிருப்பேன் என்றாலும் நான் சம்பவயிடத்தை பார்வையிடவில்லை என்பதால் தான் மேற்கண்ட தடயங்களை எனது விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ஜெயப்பிரியாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அவர் மருத்துவமனையிலிருந்து சொல்லாமல் வெளியேறிவிட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல, காயச்சான்றிதழ் நான் வாங்கியுள்ளேன்.

சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக சொல்லியுள்ள அ.சா.6 அமுதா மற்றும் அ.சா.4 செல்வம் ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் ஆகியுள்ளார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அ.சா.5 தினேஷ் சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் தனது இல்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதால் அவர்களுக்குள் இருந்த முன்விரோதத்தின் காரணமாக புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையிலும் புகார்தாரரின் உறவினர் காவல் நிலையத்தில் பணிபுரிவதால் அவர்களின் அழுத்தத்தின் காரணமாக சரிவர விசாரணை செய்யாமல் நடக்காத சம்பவத்திற்கு எதிரிகளுக்கெதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.